**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண். 207/2008**

**பி.வா.சா.1**

| | |
|---|---|
| சாட்சியின் பெயர் | : R.ராகுல் பாபா |
| தகப்பனார் பெயர் | : ராஜமோகன் |
| வயது | : 32/2024 |
| தொழில் | : |
| மதம் | : |
| ஜாதி | : |
| கிராமம் | : |
| தாலுகா | : |
| மாவட்டம் | : திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 12.08.2024 ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகி எனது தரப்பு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி எனது தரப்பு ஆவணங்களாக 1ம் பிரதிவாதி முத்தம்மாள் அவர்கள் கடந்த 16.06.1988 தேதியில் V.R.பாலகிருஷ்ணன் நாயுடு அவர்களிடமிருந்து கிரையம் தாவா சொத்துக்களை வேறு சொத்துக்களையும் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா பிராது சொத்துக்கள் மற்றும் வேறு சில சொத்துக்கள் சம்பந்தமாக V.R.பாலகிருஷ்ணன் நாயுடு மற்றும் அவர்களின் மக்களான B.சங்கர் ராமானுஜம், B.நாகராஜன், B.செல்வராஜ், B.பாலகுமார் ஆகியோர்கள் கடந்த 29.04.2002ம் தேதி ஏற்படுத்திக்கொண்ட பாகவிஸ்தி பத்திரப்பதிவு சான்றிட்ட நகல் அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா பிராது சொத்துக்கள் மற்றும் வேறு சில சொத்துக்களையும் சேர்த்து 3 முதல் 9 பிரதிவாதிகள் கடந்த 03.11.2014ம் தேதி அழகர்சாமி மற்றும் B.R.பாஸ்கரன் ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா பிராது சொத்துக்கள் மற்றும் வேறு

சில சொத்துக்கள் சம்பந்தமாக 1ம் பிரதிவாதி முத்தம்மாள் கடந்த 11.04.2008 தேதியல் B.R.பாஸ்கரன் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரம் சான்றிட்ட நகல் அது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா பிராது சொத்துக்கள் மற்றும் வேறு சில சொத்துக்களையும் சேர்த்து 1ம் பிரதிவாதி முத்தம்மாள் அவர்களின் பொது அதிகார முகவரான B.R.பாஸ்கரன் அவர்களிடமிருந்து கடந்த 15.10.2012 தேதியல் R.அழகர்சாமி அவர்கள் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் அது பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா பிராது சொத்துக்கள் மற்றும் வேறு சில சொத்துக்களையும் சேர்த்து 1ம் வாதி கடந்த 13.04.2009 தேதியில் 1ம் வாதியின் மனைவி ஹேமலதா அவர்களை கார்டியனாக கண்டு B.S.ரவிசங்கர், B.S.சிவசங்கர், B.S.கஜல்பிரியதர்ஷினி ஆகியோர்களுக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் அது பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேற்படி பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
G ASHOK PRASATH
**Principal District Munsif**
**Vedasandur**